18.02.2009

**இல.கணேசன்**
**மாநில தலைவர்**

**பத்திரிகை செய்தி**

------------------------------

கோவை மாவட்டத்தில் சோமலூா், பல்லடம். அவிநாசி. திருப்பூர், தெக்கலூா், பெருமாநல்லூா், மங்கலம், வானகராயம்பாளையம் ஆகிய பகுதிகளில் சுமாா் 4.50 இலட்சம் விசைத்தறிகள் இயங்கி வருகின்றன. அரசு மின் பயன்பாட்டினை குறைத்து அறிவித்ததின்மூலம் அனைத்து விசைத்தறி கூடங்களும் மூடப்படும் அபாய நிலையில் உள்ளது. விசைத்தறி மற்றும் அதனைச் சாா்ந்த சைசிங் (Sizing), பஞ்சாலை மற்றும் நூற்பாலை தொழில்களும் பாதிக்கப்படுவதால் மேற்படி விசைத்தறி தொழிலை நம்பி மட்டுமே தா்மபுரி, கிருஷ்ணகிரி, விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூா், மதுரை, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களிலிருந்தும் வந்திருந்து பணியாற்றிக் கொண்டு இருக்கும் சுமாா் மூன்று இலட்சம் தொழிலாளா்களும் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே தமிழக அரசு, விசைத்தறி தொழிலாளா்களின் வாழ்வாதார நலனை கருத்தில் கொண்டு, விசைத்தறி மற்றும் அதனைச் சாா்ந்த பிற தொழில்களுக்கும் விதிக்கப்பட்டுள்ள மின் அபராத கட்டணத்தை ரத்து செய்வதோடு, மின் இணைப்பு துண்டித்தலையும் உடனடியாக நிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தாயக பணியில்,

**(இல.கணேசன்)**